**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**

அசல் வழக்கு எண். 158/2022

வா.சா.1 –கந்தசாமி

26–06–2024 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. வா.சா.ஆ.6 செட்டில் மெண்ட் ஆவணத்தில் சொத்து விபரத்தில் க.ச.எண்736 என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் எனது அப்பாவிடம் இருந்து செட்டில் மெண்ட் வாங்கினேன் என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு 1972 ம் ஆண்டு கிரயபத்திரப்படி பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 1972 ம் ஆண்டு கிரயபத்திரத்தில் சொத்து விபரத்தில் கிழமேல் முலம் 16 தென்வடம் முலம் 30 என்று உள்ளது என்றால் சரிதான் அது ஆங்கிலேயர் காலத்தில் இருந்து அவ்வாறன அளவீடுகள் பதிவு செய்யப்பட்டது. என்னிடம் காட்டப்படும் பத்திரம் எனது அப்பா பெயரில் உள்ள கிரயபத்திரமா என்றால் சரிதான். 23.11.1972 ம் தேதியிட்ட சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்பட்டது. **பி.வா.சா 1** கிரயபத்திரத்தின் படி எனக்கு 1080 சதுரடி மட்டுமே பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. 1920 சதுரடி பாத்தியப்பட்டது. தாவா சொத்தை நான் 880 சதுரடி ஆக்கிரமித்து கட்டியுள்ளேன் மேலும் தான செட்டில் மெண்ட் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

2. எனது வீட்டில் வாசல் தாவா சொத்தின் வடகிழக்கே உள்ளது என்றால் வீட்டின் உள்பக்கம் கிழக்கு பார்த்தும் அதன் வெளிகேட் வாசல் வடக்கு பார்த்தும் உள்ளது. இதற்கும் மேற்கே பிரச்சனைக்குறிய இடம் பொது தடமாக உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 6 தான செட்டில் மெண்ட் பத்திரப்படி பிரதிவாதியின் வீட்டிற்கு வடக்கே எனக்கு சொத்து இல்லை என்றால் பொதுத்தடம் தான் உள்ளது. எனது சொத்தின் 1918 ம் வருடத்திய மூலபத்திரத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அதில் என்னிடம் காண்பிக்கப்படும் பத்திரம் என்றால் சரிதான். **23.04.1918 ம் தேதியிட்ட கிரய**

**ஆவணம் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ 2** ஆக குறியீடு செய்யப்பட்டது. **பி.வா.சா.ஆ** கிரயபத்திரத்தின் சொத்து விபரத்தின் செ.கருப்பகவுண்டர் வீட்டிற்கு போகின்ற 4 மூல தடத்திற்கு கிழக்கு என்று உள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கறிஞர் அறிவிப்பு பிரதிவாதிக்கு அனுப்பவில்லை. பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட கார் க.சா.எண்736/8 ல் நிர்க்கிறதா அல்லது 736/9 ல் நிர்க்கிறதா என்றால் 736/9 ல் நிர்க்கிறது. தாவா சொத்தின் தென்வட நீளம் சுமார் 73 அடி இருக்குமா என்றால் இருக்கும். நான் வீடு கட்டுவதற்கு அங்கீகாரம் வாங்கவில்லை என்றால் பழைய கிராம பஞ்சாயத்து என்பதால் வாங்கவில்லை.

3. நான் எனது வீட்டின் சுவற்றை பராமறிப்பதற்கு மேல்புறம் காலியிடம் விடவில்லை என்றால் பொது தடம் உள்ளதால் விடவில்லை. 1972 ம் ஆண்டு தான் எனது அப்பா இந்த சொத்தை வாங்கியுள்ளதால் 80 வருடமாக நான் இந்த சொத்தில் குடியிருப்பதாக சொல்வது தவறு என்றால் நான் அவ்வாறு சொல்லவில்லை. க.ச.எண் 736 ல் மொத்தம் 2 ஏக்கர் என்றால் தெரியாது. 736 ல் மொத்தம் 34 உட்பிரிவுகள் உள்ளது என்றால் தெரியாது. 1ம் வாதி கதிர்வேல் செட்டில் மெண்ட் ஆவணத்தை பார்த்துளேனா என்றால் பார்த்தது இல்லை. வா.சா.ஆ 1 கதிவேலின் செட்டில் மெண்ட் ஆவணத்தில் மேல் புறம் உள்ள தென்வடம் கிழமேல் தடத்தில் தாங்களும் சுக்கிரன் செட்டியாரும், கந்தசாமி செட்டியார், ஆகியோர்கள் நடந்துக்கொள்ள பாத்தியம் என்று உள்ளதா என்றால் உள்ளது. வா.சா.ஆ.1 செட்டில் மெண்ட் ஆவணத்தின்படி 1ம் வாதிக்கு தாவா சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

4. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 பட்டா கதிவேல் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அதில் சொத்தின் அளவு 60 சதுர மீட்டர் உள்ளது என்றால் தெரியவில்லை. இந்த பட்டாவின் படி 1ம் வாதிக்கு 654 சதுரடி மட்டும் தான் பாத்தியப்பட்டது என்றால் தெரியாது. ஆனால் அவர் 1228 சதுரடி

பாத்தியப்பட்டதாக செட்டில் மெண்ட் ஆவணம் பதிவு செய்துள்ளார் என்றால் பத்திரப்படி அவர் செய்துள்ளார். குமார் பத்திரத்தை பார்த்துளேனா என்றால் இல்லை. குமாருடை தாத்தவின் பத்திரமான 1951 ம் ஆண்டின் பத்திரப்படி தாவா சொத்து பிரதிவாதிக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கு போவதற்கு தாவா சொத்திற்கு கிழக்கு திசையில் தான் தடம் உள்ளது என்றால் சரியல்ல. மேற்கு திசையிலும் சொத்தை பராமறிப்பதற்கு தடம் உள்ளது. 1ம் வாதிக்கு தாவா சொத்தின் மேற்கு திசையில் தான் தடம் உள்ளது என்றால் தாவா சொத்து மட்டும் தான் அவருக்கு தடம். தாவா சொத்தை நானும் கதிர்வேலும் பொதுத்தடமாக பயன்படுத்தி வருவதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்து பொது தடம் என்றால் சரியல்ல.

மேலும் குறுக்கு விசாரணைக்காக வாய்தா ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

ஒப்பம், திருமதி, A. சுபஸ்ரீ, L.L.M.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.